**செய்தி வெளியீடு எண்: 451** **நாள்: 13.07.2018**

**நிதி (வழிவகைகள்–II )த்துறை,**
**செய்தி வெளியீடு, நாள் ஜூலை 13, 2018**

மொத்தம் **ரூபாய் 750.00 கோடி** மதிப்பிற்கு பங்குகள் வடிவிலான **8.15% தமிழ்நாடு மாநில வளர்ச்சிக்கடன் 2028** ஏலத்தின் மூலம் **மறுவெளியீடு** செய்யவிருப்பதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை–கோட்டை அலுவலகத்தில் **ஜூலை 17, 2018** அன்று நடத்தப்படும். போட்டி ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து பிற்பகல் 12.00 மணிக்குள்ளாகவும் போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution(E-Kuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) **ஜூலை 17, 2018** அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**